சிவமயம்.

ஸ்ரீ ஞானபண்டிதன் துணை.

# இரத்தின தனமகுட வைசியர் என்னும்
# நகரத்தார்
# முதுநெறி விளக்கம்.

9168
V5925

இஃது
இராமநாதபுரம் ஜில்லா
கோட்டையூர்
ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்பரர்,
**அஷ்டபந்தன**
**மகா கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக**
ஷையூர் நகரத்தார்கள் பொருளுதவியால்

கடியாபட்டி
மனோன்மணிவிலாஸ் பிரஸில்
பிரசுரம் செய்தது.
1940.

ஆசிரியர்
கவிபாலசரஸ்வதி
**ந. வேற்சாமிநாதக் கவிராஜர்**
சிவஞானம் பத்திராதிபர்
தூர்வாசபுரம்.

விலை அணா 4.

268

324
30-2
KOVILOOR MADALAYAM
KOVILOOR
(NEAR) KARAIKUDI

உ
சிவமயம்.
ஸ்ரீ ஞானபண்டிதன் துணை.


# இரத்தின தனமகுட வைசியர் என்னும்
# நகரத்தார்
# முதுநெறி விளக்கம்.

திருப்பூவண
உ
சிவமயம்
TIRUPPUOVANA MADAM.

இஃது
இராமநாதபுரம் ஜில்லா
கோட்டையூர்
ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்பரர்,
**அஷ்டபந்தன**
**மகா கும்பாபிஷேக ஞாபகார்த்தமாக**
௸யூர் நகரத்தார்கள் பொருளுதவியால்

கடியாபட்டி
மனோன்மணிவிலாஸ் பிரஸில்
பிரசுரம் செய்தது.
1940.

ஆசிரியர்
கவிபாலசரஸ்வதி
**ந. வேற்சாமிநாதக் கவிராஜர்**
சிவஞானம் பத்திராதிபர்
தூர்வாசபுரம்.



கோட்டையூர் ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள்சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்பரர் ஆலய கும்பாபிஷேகஞாபகார்த்தம்

30-2

சிவமயம்

## கானாடுகாத்தான் பழ. ப, பழநியப்ப செட்டியார் அபிப்பிராயம்

தூர்வாசபுரம் கவிபாலசரஸ்வதி சிவஞானம் பத்திராதிபர் ந. வேற்சாமிநாதக்கவிராஜாவர்கள் இயற்றிய,இரத்தின தனமகுட வைசியர்என்னும் நகரத்தார் முதுநெறி விளக்கமென்கிற நூலைப்பார்த்தேன்.

அது தேவகோட்டை வித்துவான் மகா ௱-௱ஸ்ரீ வீர. லெ. சிந்நயச் செட்டியாரவர்கள் செய்த நூலை அநுசரித்து நமது பழக்க வழக்கங்களை விரிவாக எழுதி இருக்கிறது.

இந்நூல் நம்மவர்களின் தரும நெறியையும்,சிவபக்தியையும்,கல்வித் திறத்தையும், செல்வப்பெருக்கையும், நன்கு விளக்கிக்காட்டுகிறது என்பது எனது அபிப்பிராயம்.

## நகரப் பெண்களின் தீட்சாகுரு துளாவூர் நிறம்ப அழகியராதீன மடாலயம்.

நமது இரத்தின தனமகுட வைசியரென்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம், என்னும் நூலைபார்த்தோம்.

அதிலுள்ள விஷயங்கள் நூலாசிரியரின் கல்வித்திறத்தையும் நகரத்தார்களின் சிவசமைய ஒழுக்க நெறிகளையும், செல்வச்சிறப்பையும், நன்கு விளக்கிக்காட்டுகின்றது.

ஸ்ரீ மங்களாம்பிகாசமேத வாஞ்சீஸ்பரர் கிருபையால் அரிய இந்நூலை இயற்றிய, கவிபால சரஸ்வதி, ந. வேற்சாமிநாதக் கவிராஜருக்கும் நமது நகரத்தார்களுக்கும் சகல ஐஸ்வரியமும் உண்டாகுக.

ஸ்ரீசுப்பிரமணிய தேசிகராகிய பால உதயமூர்த்திக்குருக்கள்.

## காரைக்குடி வித்துவான், சோ. வேலுச்சாமிக் கவிராஜர் அபிப்பிராயம்.

தூர்வாசபுரம் கவிபாலசரஸ்வதி ந. வேற்சாமிநாதக் கவிராஜர் சிவஞானம் பத்திராதிபர் இயற்றிய இரத்தின தனமகுட வைசியரென்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம் என்ற நூலைப் பார்த்தேன்.

இது நகரத்தார்களின் மிக நீண்டகாலமுதல் தற்காலம் வரை தொன்று தொட்ட நற்பெரு வரலாற்றை விளக்குவதோடு அவர்களின் பிரபுத்துவம் ஈகை, கல்வி, சம்பத்து, சிவபக்தி, சிவதீக்ஷை தானம் தருமம் முதலிய சிறப்புகளையும் நன்குகாட்டுகின்றது

இந்நூல் உலகினர் பலரும் இவர்களின் நன் னெறியைக் கடைப்பிடித்து ஒழுகி இன்புறுதற்கு ஏவாமென்பது எனது அபிப்பிராயம்,

## காரைக்குடி முத்த வே.சொக்கலிங்கச் செட்டியார், அபிப்பிராயம்.

கவிபால சரஸ்வதி சிவஞானம் பத்திராதிபர் ந.வேற்சாமிநாதக் கவிராஜர் இயற்றிய இரத்தின தனமகுட வைசியரென்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம்,என்றல நூலைப் பார்த்தேன்

அதில் நம் நகரத்தார்களின் முற்கால சரித்திர வரலாறுகளையும் ஒழுக்க வழக்கங்களையும் சிவதரும விசேடங்களையும் தற்காலம் நடந்துவரும் தருமச்செயல்களையும் குறித்து மிகத்தெளிவாக எல்லாரும் எளிதிலுணரும்படி விளக்கிக்காட்டி இருப்பதால் மேற்படி நூலை அனைவரும் ஆதரித்து வாங்கிப் படித்து இன்புறும்படி வேண்டிக்கொள்கிறேன்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE) [illegible]

உ
சிவமயம்.
ஸ்ரீ ஞானபண்டிதன் துணை.

# இரத்தின தனமகுட வைசிய ரென்னும்

# நகரத்தார்

# முதுநெறி விளக்கம்.

காப்பு.

சீரார் நகரத்தார் சீல முதுநெறியின்
பேரார் விளக்கமதைப் பேசுதற்கு—நீராரும்
ஐந்துகர ஞறுமுக னம்பிகைபோன் வாணியரன்
வந்துதவி செய்வார் மனம்.

அமிழ்தினுமினிய நம் செந்தமிழ் பாண்டிவள நாட்டிற் றிலகமாய் விளங்கும் இரத்தின தனமகுட வைசிய ரென்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம் என்னும் இந்நூலை எனது சிற்றறிவுக்கெட்டியவாற்றான் வரையப் புகுந்தேன்.

அஃது சிற்றெறும்பு மலையை யெடுப்பேனெனச் சொல்வதை ஒக்குமெனினும், பனிமாலிமயப் பொருப்படைந் சேர்ந்த போல்லாக்கருங் காக்கையும் பொன்னிற முற்றிருக்கு மென்ற முதுமொழிப்படி இந்நாட்டின் வாழ் பெரியோர்கள் செவியேற்று தூயனவாக்கி அறிவால் நிறைந்த பலர்களும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் செய்வார்களென்ற திண்ணிய எண்ணம் சேர்த்து நின்றாக்கின.

இம்மரபார் சரித்திரம் துளாவூர் மடாலயச் செப்புப் பட்டயத்தையும் தேவகோட்டை வித்துவான் வீர. லெ. சிங்கயச் செட்டியாரவர்கள் இயற்றிய நூலையும் சிதம்பரம் மெய்கண்டான் வித்தியாசாலை த்தாபகராகிய காரைக்குடி வித்துவான் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள் செய்த நூலையும், இருமொழிப் புலவ

ரென்றும் பண்டிதமணி யென்னும் பட்டம் பெற்று வாழும் மகிபாலன்பட்டி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் செய்த நூலையும் பார்த்து இந்நூல் வரையத் தொடங்கியதாம்.

நூல்.

இத்தனப் பெரும் வணிகர்கள் கலியுகம் (200) இருநூறு ஆண்டுகளுக்கு முன் நாகநாட்டில் "சாந்தியாபுரி" என்னும் நகரில் சந்திரகுலகோத்திர வைசியரென்றபெயரும் கோபதீச்சுரசுவாமி தெரிசனமும்மரகதவிநாயகர்பூசையும் சதாசிவகுருபீடத்திற்றீக்ஷையும் இரத்தினவியாபாரமும் செய்துகொண்டிருந்தார்கள் அந்நாட்டரசன் செய்த கொடுமையால், முன்னோர் காலத்தில் பார்வதி தேவியார் பரமசிவனைப் பார்த்து மகிழ்ந்து சூரியர் சந்திரர் யாவரென்று கேட்க அவ்விருவர்களும் நமது நேத்திரமென்று கூற அம்மை வேடிக்கையாக தமது திருக்கரங்களால் இறைவனின் இரண்டு கண்களையும் மூடினாள். மூடிய உடனே தேவர்கள் முதலாம் ஜீவர்களின் கண்ணொளி மழுங்கி இருள்சூழப் பெற்றார்கள்.

பங்கயனும் முகுந்தனும் பரமசிவன்பால் வந்து ஓலமிட்டார்கள் சிவபெருமான் நெற்றிக்கண்ணை கருணையுடன் திறந்தார் பார்வதியாரும் கண்களை மூடியிருந்த கரங்களைத் திறந்தாள் உலகெலாம் கோடி தாணி உதித்ததுபோற் பிரகாசமுண்டாயிற்று.

அப்பொழுது பார்வதியார் பயந்து உமது கண்களை மூடிய தோஷந்திர பூவுலகின் யான் பூசிக்கத்தகுந்த நற்றலம்யாதெனக் காருண்ய மூர்த்தி மகிழ்ந்து காஞ்சிபுர மகிமையைக் கூறி உன் இஷ்டம் போற் காஞ்சிபுரத்துக்குப் போய் தவஞ்செய்வாயெனச் சிவபூஜா விதியையும் அருளிச்செய்தார்.

தேவியார் பிரிவாற்றாது விடைபெற்று விமானத்தி லூர்ந்து அஷ்ட இலக்குமிகளும் சூழ்ந்துவர தோழிமார்களுடன் கங்காநதிக்கரை வந்து கங்கையில் ஸ்நானம் செய்து சிலநாட்டங்கி தொண்டை மண்டலம் வந்து வளமிகுங், காஞ்சிப்பதியைச் சார்ந்து ஈசான்ய திக்கில் தீர்த்தமுண்டாக்கி வலக்கரத்திற் காப்பணிந்து அங்கு சிவலிங்கம் தாபித்து பூசித்தாள் அதனாற் காப்புத் தீர்த்தம் என்றும், காப்பு, லிங்கம், என்றும் திருநாமம் வழங்கிவருகிறது.

பின் அத்தவச் சிறப்புகளைக் கண்டுமகிழ்ந்து உலகாணிக் கரையிற் சேர்ந்து கம்பாநதியிலும் ஆலய தீர்த்தங்களிலும் ஸ்நானம்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI

செய்து விநாயகர் முதலிய பரிவார தேவர்களைப் பார்த்துக் களித்து ஒப்பற்ற மாவடியிலெழுந்தருளி இருக்கும் ஏகாம்பரநாதரைக் கண்டு ஏத்தித் தொழுது நல்ல சுபமுகூர்த்தம் பார்த்து கம்பாநதியில் ஸ்நானம் செய்து பீதாம்பரம் தரித்து திருநீறணிந்து உருத்திராக்கம் பூண்டு சங்கற்பம் செய்துகொண்டு அங்கர்நியாசம் முதலாம் சுத்தி செய்து ஏழைகளுக்கு உதவி தேவர் முனிவர் சூழ பல வாத்தியங்களும் வேதங்களும் முழங்க தேவியார் தமது திருக்கரங்களால் மிருத்திகையை சிவலிங்கமாகக் குவித்து, நித்தியமாய், நின்மலமாய், நிட்களமாய், நிராமயமாய் சத்தியமாய், சித்துருவாய் விளங்குபவனுக்கு ஆசனம் வைத்து எண்ணெய், மா, பஞ்சதிரவியம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர். தேன், கருப்புச்சாறு, பழங்களின் சாறு, அன்னம், இளநீர். பன்னீர், விபூதி, சந்தனம், எண்ணில் பல தீர்த்தம் இவைகளால் அபிடேகஞ் செய்து பீதாம்பரம் தரித்து முந்நூலணிந்து களபம் சாத்தி மலர்மாலை சூட்டி அருச்சித்து, பலாதிகள் நிவேதித்து சோடச உபசாரங்கள் செய்து மீண்டும் அருச்சித்து ஹர,ஹர,ஒலியும் வெண்சாமரை நடனம் வாத்தியம் முழங்க சமர்ப்பித்து நமஸ்காரங்களுடன் பிரதட்சனம் செய்து சிரமேற் கரங்கூப்பிச் சிந்தித்து அ, முதல் க்ஷம், ஈறுக உள்ள ஐம்பத்தோரக்கரங்களில் நான்கு அக்கரங்களை மூலாதாரத்திலும் ப, முதல் ஆறு அக்கரங்களை சுவாதிட்டானத்திலும் ட, முதல் பத்து அக்கரங்களை மணிபூரகத்திலும் க, முதல் பன்னிரண்டு அக்கரங்களை அநாகதத்திலும் அம், முதல் பதினாறு அக்கரங்களை விசுத்தியிலும் ஹ, ள, க்ஷ, மூன்று அக்கரங்களை ஆக்ஞையிலும் அங்கர்நியாசம் செய்து ஆத்மசுத்தி பூதசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி லிங்கசுத்தி என்கிற பஞ்ச சுத்திகளுஞ் செய்து மூலமந்திரம் ஜெபித்து பிராணாயாமத்திலிருந்து ஆவாகனம், ஆஸ்தாபனம் சந்நிதாபனம் சந்நிரோதனம், சகளீகரணம், பரமீகரணம், அவகுண்டனம் தேனு முத்திரை அமுர்தீகரணம், திக்குபந்தனம் முதலாம் மந்திரகிரியா பாவனைகளைக் கொண்டு பூசித்து அரிய தவத்தைச் செய்தாள்.

இவ்வண்ணம் விதிப்படி கிரியை வழுவாது பூசை செய்து தியானிக்கும் பார்வதிதேவியாரைச் சோதிக்க எண்ணியோ சிவ பூசை செய்வார்க்கு அதன் தன்மையை விளக்க எண்ணியோ யாமறியோம்.

சிவபெருமான் அச்சமயம் கம்பா நதியைப் பெருகச்செய்தார் அந்நதி பெரும் பிரவாகமாக வருவதைக் கண்டு தாம் பூசை

செய்யும் மணல் லிங்கத்துக்கு அபாயம் வருமெனப் பயந்து ஆசையால் தன் நாயகனை அணைகிறவளைப்போல தமது வளையல்களணிந்த திருக்கரங்களாலும் இரு தனங்களாலும் இறுகத் தழுவுதலும் திருமார்பு அனல்கண்ட வெண்ணெய்போல் உருகிக் குழைந்து திருமுகத்தை அழுத்தி அணைத்து லிங்கத்தைக் கட்டிக்கொண்டாள் அப்போது அந்நதி இரண்டாகப் பிரிந்து சுவாமியைச் சுற்றி ஓடியது.

பார்வதியாரும் சுவாமியைத் தழுவிய கைகளைக்கூப்பி

"ஆதியும் அந்தமாகி அறிவினுக்கறிவாய் நிற்கும்
சோதியே யென்னையாளுந் துணைவனே போற்றி போற்றி"

என்று தோத்திரம் செய்யக் களிகூர்ந்து, பாண்டிய மன்னன் அடித்த தழும்பு முதுகிலும், தேவர்கள் வணங்கும் தழும்பு திருவடிகளிலும் நின் திருக்கரங்களின் வளைத்தழும்பும் முலைத்தழும்பு மார்பிலும் பிரகாசிப்பதைக் காண்பாயாகவென விடைமீது எதிரிற்றோன்றினர். அப்போது பார்வதியார் உடல் பொருள் ஆவி மூன்றையும் திருவடிகளிற் சமர்ப்பித்து ஞானவடிவாகிய தமது இருதயத்தில் அருள் என்னும், திருமஞ்சனம் செய்து சாந்தமென்னும் சந்தனம் சாத்தி ஞானம், மோனம், தானம், தவம், தருமம், ஊக்கம், கல்வி, கேள்வி என்கிற அஷ்ட புஷ்பங்களால் துதித்து நிற்பதைப் பார்த்து தமது கண்களை மூடிய தோஷத்தை நிவர்த்தி செய்தார்.

மேற் கூறிய பெருமைகளெல்லாம் நிறைந்த காஞ்சிமா நகருக்கு வாக்கருதி முன்னிருந்த சாந்தியாபுரி என்னும் நகரைவிட்டு கலியுகம் 204 ல் வந்து சத்திபுரீசுவரர் தெரிசனமும் புட்காநதி ஸ்நானமும் அருணகிரி சிவசங்காராச்சாரியரிடம் தீட்சையும் மரகத விநாயகர் பூசையும் இரத்தின வியாபாரமும் செய்துவந்தார்கள்.

பின்பு அந்நகரத்துக் கதிபனாகிய பிரதாப அரசன் அநீதியாய் அபராத தெண்டனைகள் விதிக்கத் தொடங்கிய நிமித்தம் அக்காஞ்சயம்பதியை நீங்கி சோழதேசத்திற்கு வந்தார்கள்.

பின் கலியுகம் 2312-வருஷத்தில் மநுநீதிச் சோழன் அறிந்து அவர்களை அழைத்து காவிரிப்பூம்பட்டணத்தில் இருக்கச்செய்து, ருத்திராபதீசுவரர் தெரிசனமும் காவிரிநதி ஸ்நானமும் சிதம்பரத்தில் பதஞ்சலிகோத்திர ஈசான்ய சிவாச்சாரியாரிடத்தில் தீட்சை

யும் மரகத விநாயகர் பூசையும் நடத்தி (8000) குடும்பத்துடன் இரத்தின தனமகுட வைசிய ரெனப் பெயர் வகித்து சிங்கக்கொடி தங்கக் கலசம் வைத்து மாடங்களோங்கிய மாளிகைகளமைத்து மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளுங்காலத்து அம்முடியை வாழ்த்தி யெடுத்துக் கொடுக்கும் தன்மை பெற்றதால் பிரதான வைசியரென்கிற பெயரும் பெற்று வாழ்ந்துவந்தார்கள்.

கலியுகம் 3775-ஆவதில் சோழநாட்டை அரசாண்ட பூவந்திச் சோழன் என்பான் தங்கள் குலப் பெண்ணை அநீதியாய் சிறை வைத்ததினால் (8000) குடும்பத்தார்களும்,

"அரசனின் வாக்கைநம்பி அனைவரும் வந்தோமிங்கு
புரிசைசூழ் மாடம்வாழும் புரவலன் அநீதியாக
விரைசெறி கோதைமா வெறுக்கவே சிறையில் வைத்தான்
தரைமிசை மானம்நீத்துத் தரிப்பதோ உடலைத்தாங்கி.

என்று ஆண் குழந்தைகளை மாத்திரம் உபாத்தியாயர் ஆத்மநாத சாஸ்திரிகளிடம் விட்டு எல்லாப் பொருள்களையும் அவரிடம் கொடுத்து சிசுபரிபாலனமும் மரகத விநாயகர் பூசையும் நடக்கும்படி செய்து

கையும் தொழுது ஐந்தெழுத்தும் ஓதி மானத்தைக் காக்கப் பிராணத்தியாகஞ் செய்துகொண்டார்கள்.

அப்போது மேலத் தெருவில் வசித்துவந்த ஆறு வழியில் (600) பிள்ளைகளும் தெற்குத் தெருவில் வசித்துவந்த நான்கு வழியில் (400) பிள்ளைகளும் கீழத்தெருவில் வசித்துவந்த ஏழுவழியில் (502) பிள்ளைகளும் ஆக (1502) பிள்ளைகள் ஆத்மநாத சாஸ்திரிகளாற் கல்விகற்றுவரும் நாளில் கலியுகம் 3784வது ஆண்டில் பூவந்திச் சோழன் புத்திரனாகிய ராஜபூஷண சோழனுக்கு பட்டாபிஷேகஞ் செய்யத் தீர்மானித்து ஆத்மநாத சாஸ்திரிகளாதரவில் இருந்துவரும் புதல்வர்களைத் தருவித்து, அரசன் வணிகச் செல்வர்காள், என் புத்திரனுக்கு மகுடம் சூட்ட வழக்கம்போல் நீங்கள் கிரீடத்தை யெடுத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்க புதல்வர்கள்

"எங்கள்குலப் பெண்களையே தெரியாமலோர் நாள்
எடுத்துநீர் சிறைவைத்தி ரதனால்முன்னோர்

தங்கள்பெரு மானமதைக் காக்கவேண்டித்
தனியுயிர்சே ருடலதனைத் துரும்பாயெண்ணிப்
பங்கமிலா தெங்களையு மிங்கு பார்ப்பார்
பக்கலின்விட் டகன்றுயிரைப் பலிசெய்தார்கள்
இங்கதனை நினைத்திட்டா லெரியிநெய்யை
இட்டதுபோ லடிவயிற்றி லெரிவதென்றார்''

இச்செய்யுளைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு அப்புதல்வர்களைத் தேற்றி நான் செய்த குற்றத்தைப் பொருத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்ட புதல்வர்கள் கல்வி அறிவால் நிறைந்தவர்களாதலின், சென்றது கருதாது அரசே, மணமாகாத நாங்கள் மகுடம் சூட்டுவது எப்படி யென்றும் அப்படி மணஞ்செய்து கொள்வதானால் எங்கள் குலத்திற் பெண்கள் இல்லையே யென்றும் சொன்னார்கள்.

அதுகேட்ட அரசன் சபையிலிருந்த பெரியோர்களைநோக்கி இதற்கு இனி என்ன செய்வதென?

பெரியோர்கள் :— அரசே,

பிராமணர்கள் அவசியமானால் க்ஷத்திரியகுலப் பெண்களையும், க்ஷத்திரியர்கள், வைசியகுலத்துப் பெண்களையும், வைசியர்கள் வேளாளர் குலப்பெண்களையும் விவாகஞ் செய்துகொள்ளலா மென விதி இருக்கிறது என்றார்கள்.

அரசன் வேளாளர்களைத் தருவித்து விபரங்களைக் கூறி எமது புத்திரனுக்கு மகுடம் சூட்டும்படி செய்யவேண்டியது உங்களைச் சேர்ந்ததேயாகு மென்றான்.

அரசன் வாக்கைசெவியுற்ற வேளாளர்கள் என்றும் கைமாறு கருதாது உதவிபுரிபவர்களாதலின் எங்கள் குலப்பெண்ணை வைசிய குலப்புதல்வர்களுக்குக் கொடுப்பதானால் நாங்கள்கொடுக்கும் பெண்களுக்கு எங்களுக்கு உபதேசம்செய்யும் குருவே உபதேசம்செய்ய வேண்டுமென்றார்கள்.

அரசன், ஆத்மநாத சாஸ்திரியாருடன் வந்திருக்கும் வணிகப் புதல்வர்களைக் கேட்டு அதுபோல் அவர்களும் இசைந்து

9168
Y5925

கொண்ட பின்னர், மேலத்தெருவில் வசித்துவந்த (600) புதல்வர்களுக்கு கார்காத்த வேளாளர் பெண்கள் கொடுத்து அப்பெண்களுக்கு, திருவாரூர் திருநாவுக்கரசு தேசிகரை தீட்சாகுருவாக நியமித்தார்கள்.

தெற்குத் தெருவில் வசித்துவந்த (400) புதல்வர்களுக்கு, காணியான வேளாளர், பெண்கள் கொடுத்து அப்பெண்களுக்கு, குடந்தை, சிவஞான தேசிகரைத் தீட்சாகுருவாக நியமித்தார்கள்.

கீழத்தெருவில் வசித்துவந்த (502) புதல்வர்களுக்கு சோழிய வேளாளர், பெண்கள் கொடுத்து அப்பெண்களுக்கு, ஸ்ரீ வாஞ்சியம், நிரம்ப அழகிய தேசிகரை தீட்சாகுருவாக நியமித்தார்கள்.

இவ்விதம் சைவசமைய சிவதரும சிவாகமபுராண விபூதி உருத்திராக்க பஞ்சாக்ஷர மகாமந்திரயோக சம்பன்னர்களாய் வாழ்ந்து வரும் நாளில், சௌந்திரபாண்டிய ராஜன் பாண்டி நாட்டை விட்டு சோழதேசம் சென்று தாம் வந்திருப்பதை ராஜபூஷண சோழனுக்கு அறிவிக்க சோழமன்னனும் மகிழ்ந்து அழைக்கவேண்டிய முறைப்படி அழைத்து ஆசனத்திலருகிருக்கும்படி செய்தான்.

பாண்டிய அரசன் சோழ மன்னனைப் பார்த்து, எமது நாட்டினுக்கு, வியாபார வைசியர் அவசியமாக வேண்டியதிருப்பதால் அம்மரபாரைத் தரவேண்டுமென்று கேட்டார் அவ்விதமே தருவதாய்க் கூறி காவிரிப்பூம் பட்டணத்திலிருந்த, இரத்தின மகுடபூபால வைசியர்களை வரவழைத்து சிலர்களைப் பாண்டிநாட்டுக்குப் போயிருக்கும்படி சொன்னான்.

வைசியர்கள் சோழ மன்னனைப் பார்த்து நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் போக முடியாதென்றும் அப்படி எல்லோரும் போயிருப்பதானல் தாங்கள் எங்களுக்கு மரியாதை செய்து வருகிறபடி ராஜமரியாதை தந்து பற்றுதலாய் காப்பாற்றுவதாக தங்கள் முன்பு இப்பாண்டிய அரசன் உறுதிகூறின் நாங்கள் போயிருங்கிறோமென்றார்கள்.

அதுபோல் பாண்டிய மன்னன் சம்மதித்து உறுதி கூறினன்.

பின் கலியுகம் (3808) வது ஆண்டில் நிகழ்ந்த பிலவங்கவரு வைகாசி-மீ 21உ சுக்கிரவாரம் அஸ்த நக்ஷத்திர சுபதினத்தில், சௌந்திர பாண்டியனுடனும் தமது தீட்சாகுருக்களுடனும் பாண்டிவள நாட்டில் ஓங்காரக்குடி வந்தார்கள்.

காவிரிப்பூம் பட்டணத்தில் மேலத்தெருவில் இல்லறத்துடன் வசித்துவந்த (600) குடுபத்தார்களுக்கு அரியூர் நகரையும் பிரான்மலைக் கோவிலையும்விட்டுக் கொடுத்தார்கள்.

தெற்குத் தெருவிலிருந்த நானூறு குடும்பத்தார்களுக்கு 'சுந்தர பட்டணமும் அவ்வூர் கோவிலையும் விட்டுக்கொடுத்தார்கள்'

கீழத்தெருவில் வசித்துவந்த (502) குடும்பத்தார்களுக்கு இளையாற்றக்குடியையும் அவ்வூர் கோவிலையும் கொடுத்தார்கள்.

கலியுகம் 3784 வது ஆண்டில் காவிரிப்பூம் பட்டணத்தில் ஷை தெருவில் வசித்துவந்த வைசியர்களின் பெண்களுக்கு குருஸ்தானமாக ஸ்ரீ வாஞ்சியம், கிரம்ப அழகிய தேசிகரை, கலியுகம் 3808 வது ஆண்டு பாண்டி நாட்டுக்கு வரும்போதே அழைத்துவந்து துளாவூரில் மடாலயம் ஏற்படுத்தி உபதேசம் பெற்றுவருகிறார்கள்.

சிதம்பரம் ஈசான்ய சிவாச்சாரியார் ஆக்ஞை பெற்று பாண்டிநாட்டு ஆசான், என்னும் கலாமடத்து சுவாமிகளை தீட்சா குருவாகக் கொண்டார்கள்.

ஷை கலாமடத்து சுவாமிகள் கங்கா யாத்திரை செய்துவரச் சென்று 12- வருடகாலம் வாராததால் 9, கோவில் நகரத்தார்களுட் சிலர், கலியுகம் 4656 ஆண்டில் திருப்புனல்வாயிலில் வேறு வணிகர்களுக்கும் வேளாளர்களுக்கும் குருவாயிருந்த குருஸ்தானத்தை அடைந்து உபதேசம் பெற்றுக்கொண்டார்கள்.

கலி 4665 ல் காசி போயிருந்த பாண்டிநாட்டாசான் கலாமடம் வந்துவிட்டார்கள் அதுதெரிந்து ஷை நகரத்தார்களும் திருப்புனல்வாயில் போய் நூதன தீட்சாகுருவுடன் கலாமடம் வந்து நடந்ததைக் கூறி அனுக்கிரகிக்கிறபடி நடப்பதாய்க் கேட்டுக்கொண்டார்கள், பாண்டிநாட்டாசான் புதிதாக கேட்டுக்கொண்ட வகுப்பாரும் அவர்கள் பரம்பரையும் புதியகுரு இடமே தீட்சை பெற்றுக்

கொள்ள அனுமதி கொடுத்து கலி (4696) ல் சென்ற அக்ஷய-ஸு ஐப்பசி-மீ 1உ சுபதினத்தில் முன் தீட்சை பெற்றுக்கொண்டவர்களை விட்டு கனகபுரம், இல்லஞ்சேரி பட்டணம் என்னும் பாதாக்குடி மடத்தைத் தாபித்தார்கள். (சத்தியம், கல்வி, அடக்கம், ஈதல், செல்வம்) முதலியவைகளே தம்மைக் காத்து நிலைநாட்டும் கோட்டயாகக்கொண்ட காரணத்தாலும் இளையாற்றக்குடி நகரம் நாடுகளுக்குள் கோட்டைபோல் நடுமண்டலமாக இருத்தலாலும் நாட்டுக்கோட்டையார் என்னும் நாமம் பெற்றிருக்கிறார்கள்.

எந்த இடங்களிற் றாங்கள் வசிக்களெண்ணினும் அது பாலைவனமாயினும், மருதநிலம் குறிஞ்சி நிலமென்று கூறத் தகுந்ததாய் பல வளங்களையும் உண்டாக்கி மாடமாளிகைகளோங்கிய, நகரமாகச் செய்யும் தன்மையால் 'நகரத்தார்' என்னும் நாமம் பெற்றிருக்கிறார்கள்.

இன்னமும், பிரதான வைசியரென்றும், மகுடவைசியரென்றும், தனவைசியரென்றும், உபயகுல பூபால வைசியரென்றும், சந்திர கங்காகுல வைசியரென்றும், சிவகோத்திர வைசியரென்றும் பெயர்கள் வழங்குதலுமுண்டு.

தங்களுக்குள் சம்மந்தம் முதலியன செய்துகொள்ளவும் இன்னும் பல காரணங்களைக் கொண்டும் ஏழு வழிகளாக இளையாற்றக்குடியில் வசித்துவரும் நாளில் எட்டுவகைக் கூட்டத்தாராகி ஒவ்வொருவர்களுக்கும் வேறு கோவில்கள் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று பாண்டிய ராஜனைக் கேட்டுக் கொண்டார்கள்.

பாண்டிய அரசனும் றாங்கள் மனம்போற் செய்வோமெனக் கூறி.

1. கைலாய நாதரையும் நித்தியகல்யணியையும் பிரதிட்டை செய்த தலமாகிய கல்வாசல் நாட்டில் இளையாற்றக்குடிக் கோவிலை கலியுகம் 3808-ஸு கொடுக்கப்பெற்று,

அக்கோவிலார்

(1) ஒக்கூருடையார் கோத்திரம்

(2) அரும்பாற்கிளையரான, பட்டணச்சாமியார் [கோத்திரம்.
(3) பெருமருதூருடையார் கோத்திரம்.
(4) கழனிவாசக்குடியார் கோத்திரம்.
(5) கிங்கிணிக்கூருடையார் கோத்திரம்.
(6) பேரசெந்தூருடையார் கோத்திரம்.
(7) சிறுசேத்தூருடையார் கோத்திரம்.

என வகுத்து வாழ்ந்துவருகிறுர்கள்,

2. மற்ருேர் வகையாருக்கு, சோளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் திரிபுவன சக்கரவர்த்தியால் ஐநூற்றீசரையும் பெரியநாயகி அம்மையாரையும் பிரதிட்டை செய்த தலமாகிய வீர பாண்டியபுர மென்னும் மாற்றூர்க் கோவிலை கலியுகம் (3813) வது ஆண்டில் கொடுக்கப் பெற்று அக்கோவிலார்,

(1) உறையூருடையார் கோத்திரம்.
(2) அரும்பாக்கூருடையார் கோத்திரம்.
(3) மணலூருடையார் கோத்திரம்.
(4) மண்ணூருடையார் கோத்திரம்.
(5) கண்ணூருடையார் கோத்திரம்.
(6) கருப்பூருடையார் கோத்திரம்.
(7) குளத்தூருடையார் கோத்திரம்.

என வகுத்து வாழ்ந்துவருகிறுர்கள்.

3. மற்ருேர் வகையாருக்கு சோளசிங்கவளநாடாகிய வள வேந்திர ராஜனுல் வளரொளீநாதரையும் வடிவுடையம்மையாரையும் பிரதிட்டை செய்த தலமாகிய 'வயிரவன் பட்டிக் கோவிலை' கலியுகம் (3813) ல் கொடுக்கப் பெற்று அக்கோவிலார்

(1) ஏழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தூருடையார் கோத்திரம்,

இதில் உட்பிரிவு

(1) பெரிய வகுப்பு.
(2) தெய்யனுர் வகுப்பு (தெய்வநாயகர் வகுப்பு.)
(3) பிள்ளையார் வகுப்பு.

(2) கழனிவாசலுடையார் கோத்திரம்.

(3) மருதேந்திரபுரமுடையார் கோத்திரம்.

என வகுத்து வாழ்ந்துவருகிருர்கள்.

4. மற்ருேர் வகையாருக்கு காருண்யபாண்டிய அரசனுல் ஆட்கொண்டநாதரையும் சிவபுரத்தேவியையும் பிரதிட்டை செய்த தலமாகிய சொர்ணபுரமென்கின்ற 'இரணியூர்க் கோவிலை' கலியுகம் (3815) ல் கொடுக்கப் பெற்று, மருதங்குடியான ராஜநாராயணபுரத்தில், இரணியூர்த் திருவேட்பூருடையார் கோத்திரம் என வகுத்து வாழ்ந்துவருகிருர்கள்.

5. மற்ருேர் வகையாருக்கு நேமநாட்டில் நேமராஜனுல் ஜெயங்கொண்ட சோளேசரையும் சவுந்திரிய நாயகியையும் பிரதிட்டை செய்த மதுநந்திபுரமென்னும் 'நேமங் கோவிலை' கலியுகம் (3815) ல் கொடுக்ப்பெற்று அக்கோவிலார்,

கோளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனுறுபாயும் இளநலமுடையார் கோத்திரம் என வகுத்துவாழ்ந்து வருகிருர்கள்.

6. மற்ருேர் வகையாருக்கு நந்தி ராஜனுல் கற்பக விநாயகரையும் திருவீசரையும் சிவகாமவல்லியையும் மருதீசரையும் வாடாமலர்மங்கையையும் பிரதிட்டை செய்த நந்திபுரமென்னும் 'பிள்ளையார் பட்டிக் கோவிலை' கலியுகம் (3815) வது ஆண்டில் கொடுக்கப் பெற்று அக்கோவிலார்,

(1) கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான, குலசேகரபுரத்தில் இரணியூர், மருதங்குடியான ராஜநாராயணபுரத்தில் பிள்ளையார் பட்டியான திருவேட்பூருடையார் கோத்திரம் என வகுத்து வாழ்ந்துவருகிருர்கள்.

7. மற்ருேர் வகையாருக்கு திரிபுவன சக்கரவர்த்தியால் தான்ருேன்றி ஈசரையும் சவுந்தர நாயகியையும் பிரதிட்டை செய்த க்ஷேத்திரமாகிய அதிவீரபாண்டியபுர மென்றும் பிரமபுர மென்றும் வளங்குகின்ற 'இலுப்பைக்குடிக் கோவிலைக் கலியுகம் (3815)ல் கொடுக்கப் பெற்று அக்கோவிலார்,

(1) கோளசிங்க வளநாடாகிய பிரம்பூர்நாட்டில் இலுப்பைபக்குடியான, புகழிடங்கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரமுடையார் கோத்திரம் என வகுத்து வாழ்ந்துவருகிறார்கள்.

8. மற்றோர் வகையாருக்கு தேசிகநாதரையும் ஆவுடைய நாயகியையும் பிரதிட்டை செய்த பெதரிகாபுரமாகிய 'சூரைக்குடிக் கோவிலை கலியுகம் (3819) ல் கொடுக்கப்பெற்று அக்கோவிலார்.

(1) கோளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில் புகழ்வேண்டிய பாக்கியமுடையார் கோத்திரம் என வகுத்து வாழ்ந்து வருகிறார்கள்.

9. கண்டீசுரரையும் காமாக்ஷியம்மையாரையும் பிரதிட்டை செய்த கெந்தகாபுரமாகிய வேலங்குடிக்கோவிலை கலியுகம் (3819)ல் கொடுக்கப்பெற்று அக்கோவிலார்,

(1) கோளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிகநாராயணபுரத்தில், கழனி நல்லூருடையார் கோத்திர மென வகுத்து வாழ்ந்து வருகிறார்கள்.

கலியுகம் (4262) ஆண்டில் பூங்கொன்றை நாட்டு வேலங்குடியில் மாணிக்கப்பெருந் தெருவில் வசித்துக்கொண்டிருந்த 'நேமங் கோவில்' இளநலமுடையார் கோத்திரம் வீரப்ப செட்டியார் குமாரன் அருணசலச் செட்டியார் புத்திரி(5)வயதுள்ள முத்து மீனாளை, காருண்ய பாண்டிய அரசன் வேட்டைக்கு வந்தகாலத்து அப்புத்திரியின் அழகைக்கண்டு தன்வாகனத்தில் வைத்துக்கொண்டு தனது நகரம்போய்ச் சேர்ந்தான் அருணசலச் செட்டியார் தமது பெண்ணைக் காணாது அலைந்து வருந்திச் சோர்வடைந்து,

"என்செய்வேன் எனதருமைப் புத்திரியே
எமைவிட்டு எங்கெங்கு சென்றாயோநீ
பொன்செய்த மேனியாய் கானகத்தே புகுந்தனையோ
போனதெங்கே.

வன்செய்த நெஞ்சகமும் உனைநினைந்து
வெண்ணெய் போல் வாடிநிற்றல்
முன்செய்த தீவினையோ யானறியேன்
எனப்புலம்பி மூர்ச்சையானார்''

இவ்விதம் மூர்ச்சையாய்க் கிடக்கும் சமயம் பாண்டியஅரசன் பரிமீ தேற்றிச் சென்றதைத் தெரிந்த சிலர்கள்வந்து செட்டியாரிடம் நடந்ததைக் கூறினார்கள்.

அதைத்தெரிந்த அருணாசலச் செட்டியார் வருந்தி நகரத் தார்களிடம் சொல்ல அப்போது நகரத்தார்களும் ஒன்றுகூடி சிறை யெடுத்துச் சென்ற பெண்ணுக்கு முடிவான தெண்டனை செய்வ தாய்த் தீர்மானித்துக் கொண்டு அரசனிடம் சென்று புதல்வியைக் கேட்டார்கள்.

அரசன் அவர்கள் வந்திருக்கும் நிலமையையும் குலமுறை யையும் நன்கு தெரிந்துகொண்டு, தருமநெறி தவறாத வணிகர்காள், உங்கள் புத்திரியென்று எமக்குத்தெரியாது நான் எடுத்துக்கொண்டு வந்த பெண்ணை உங்களிடம் கொடுத்தால் உங்கள் குல வழக்கப்படி கொலைசெய்து விடுவீர்களென்று எமக்குத் தோன்றுவதால் கொ டுக்க முடியாதென்று மறுத்து பின்னரும் நீங்கள்வந்து ஆவலுடன் கேட்பதால் தருகிறேன் அப்பெண்ணை நீங்கள் கொலைசெய்வீர்களா னால் ஒருதலைக்கு எட்டுத்தலையும் எண்ணாயிரம் பொன்னும் உங்களி டம் வாங்குவேனென்று சொல்லி பெண்ணைக்கொடுத்தான்.

அதற்குச் சம்மதித்து பெண்ணைக் கூட்டிவந்து குலமுறைப் படி செய்தார்கள்.

பின் எல்லோரும் ஒன்றுகூடி நம்மள் எழுவகைக்கு எழு தலை கொடுக்கலாம் இன்னம் ஒரு தலைக்கு என்ன செய்வதென வருந்திக்கொண்டிருக்கும் பொழுது இளையாற்றக்குடிக் கோவில் 1, இரணியூர்க் கோவில் 2, பிள்ளையார்பட்டிக் கோவில் 3, நகரத்தார்க ளும் சேர்ந்து எங்கள் வழி ஒன்றாயினும் கோவில் மூன்றானதால் நாங்கள் தருகிறோமென்றபோது,

இளையாற்றக்குடிக் கோவில் ஒக்கூறுடையார் எழுந்து,

ஊனமேயான ஊனிடையிருக்கும் உயிரினைத்
துறந்து மொன்பூணாய்
மானமே புரப்பது அவனிமே லெவர்க்கும்
வரிசையும் தோற்றமுமாகும்.

என்று ஐவரிலொருவனாங் காண்டீபன் கூறியபடி கோவில், குருஸ்தானங்களில் விபூதிமுதலாகிய சகல மரியாதைகளும் எங்களுக்கு முதலீற்றருவதாய் நகரத்தார்கள் ஒப்புக்கொண்டால் நாங்கள் கொடுக்கிறோமென்று சொல்ல அதுபோல் நகரத்தார்களும் சம்மதித்தார்கள்.

பின்னர் காருண்யாண்டிய அரசனிடம் சென்று நாங்கள் ஒப்புக்கொண்டபடி எட்டுத்தலையும் (8000) பொன்னும் தயாராகக் கொண்டு வந்திருக்கிறோம் பெற்றுக்கொள்ள வேண்டுமென அரசன், ஆசாரம், மெய்மை, அறிவு, பொறை, கல்வி, தேசாக என்னும் சிலர்காள் நுங்கள் பெருமையே பெருமை அறியாது யான் செய்த காரியத்தைப் பொருத்துக்கொள்ளுங்கள் என்னால் நேர்ந்த ஒரு கொலைக்கு எட்டுத் தலையும் 8000 பொன்னும் வாங்கினால் பழியஞ்சிய பெருமான் பகையாரோ, வேண்டாம், வேண்டாம் என்று கூறி போய் வாருங்களென்று சொல்ல திரும்பி வந்து தாங்கள் செய்த பெண் பழி தீர்வதற்காக உருத்திரா பதீச்சுர சுவாமி கோவிற்றிருப்பணியும் தடாக முண்டாக்கி அந்த ஊரிலிருக்கலாகா தென்று இளையாற்றக் குடியில் வசித்து வந்த (502) குடும்பத்தார்களும்.

சாபா அநுக்கிரக சக்தி பெற்றவராகவும் இருந்த கீழச்சிவற்பட்டி
மகாவித்துவான் முத்தப்ப செட்டியார் அவர்கள்,

வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும்—ஒள்ளியநீர்
எட்டிக் கடற்கிழக்கா மீதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு.

என்று கூறியபடி இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பல நகரங்களை உண்டாக்கி வசித்து வருகிறார்கள்.

கலியுகம் 4389-ல் நடந்த கலகத்தில் அரியூர் நகரம் எடுபட்டுப்போனதால் அந்தவூர் மேலத்தெருவிலிருந்த (64) குடும்

பத்தார்களும் திசைதப்பி மலையாளம் சீமையைச்சேர்ந்த கோட்டாற்றங் கரையில் வசித்து மாதகவேளுபகருக்குக் கோவிலுங் கட்டி பூசையும் நடத்தி வருகிறார்கள்.

சில சமயங்களில் ஒற்றுமையாக நற்காரியங்களைச் செய்யவும் விவகாரங்கள் வரின் அவைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் பிறருதவியன்னியில் தாங்களாகவே கூட்டங்கூடி முடித்துக்கொள்கிற வழக்கமுண்டு அக்கூட்டத்தில்,

1, நகரக் கூட்டம் என்பது ஒன்று அது ஒரு ஊரிலுள்ளவர்கள் கூடும் கூட்டம்.

2. வகுப்புக் கூட்டம் என்பது ஒன்று அது ஒரு கோத்திரத்தார் கூடும் கூட்டம்.

3. மடத்து வாயிற் கூட்டம் என்பது ஒன்று அது தீட்சாகுரு வசிக்கும் மடத்தில் அங்கு தீட்சை பெற்றுக்கொள்கிற நகரத்தார் கூடும் கூட்டம்.

4. வட்டகைக் கூட்டம் என்பது ஒன்று அது வட்டகையாகப் பிரித்திருக்கும் ஊரிலுள்ளவர்கள் கூடும் கூட்டம்.

5. நகரத்தார் கூட்டம் என்பது ஒன்று அது ஒன்பது கோவிலைச் சேர்ந்த எல்லாரும் கூடும் கூட்டம்.

முன் ஒரு சமயம் பூங்கொன்றை வேலங்குடியில் நகரத்தார்கள் கூட்டத்தில் தீர்மானம் செய்த,

நீதிகள்.

1. மாதா, பிதா, குரு, தெய்வம் பிராமணர், குலதேவதை இவர்களை வணங்கிப் பூசிக்கிறது

2. கோவில்களுக்கும் குருஸ்தானங்களுக்கும் உள்ள கிராமம் முதலானதுகளை நகரத்தார் விசாரணையில் வைத்துக் கொண்டு அவைகளில் வரும் வரும்படியை அந்தந்தத் தருமங்களுக்கே உபயோகப்படுத்துகிறது.

3. சாதிமுறை நியாயங்களிற் றவறி நடக்கிறதில்லை,

4. புருடர்களும் பெண்களும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற குருஸ்தானங்களிலேயே தீட்சா கிரியை முதலியவைகள்

வழக்கப்படி செய்துகொள்கிறது.

5. வேறொருவரிடத்தும் தீட்சாகிரியை முதலியவை செய்துகொள்ளக்கூடாது

6. சிவமதத்திலேயே இருக்கிறது, அன்னிய மதங்களில் சேரக்கூடாது.

7. ஏககோத்திரத்தில் விவாகம் செய்துகொள்கிறதில்லை (கோத்திரம்) என்றது கோவில்களும் உட்பிரிவுகளும், சுயகோத்திரத்தில் புத்திர சுவீகாரஞ் செய்துகொள்கிறது.

8. விவாககாலங்களில் மாப்பிள்ளை தொட்டுக்கொடுக்க நம்மவர்களில் ஒரு பெரியார் வாழ்த்தி திருமங்கிலியம் பூட்டுகிறது.

9. இரத்தினம், சுவர்னம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது.

10. சிவவதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை சத்தியவான்களிடம் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது.

11. தருமவட்டி வாங்கிறது குதிரை வியாபாரமும் வெற்றிலை முதலிய அழுகற் சரக்கு வியாபாரமும் செய்யக்கூடாது.

12. குடிவாரத்துக்கு உழுது பயிரிடுகிறதில்லை ஊரில் அம்பல உம்பள முதலிய உத்தியோக வேலைகள் பார்க்கக்கூடாது.

13. திருட்டு வியாபாரம் செய்யக்கூடாது. பிறர்மனை நயத்தல் தாசிகளிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது.

14. நகரமுறைமை தவறினவர்களையும் ராஜதெண்டனைக்குட்பட்டவர்களையும் சோரஞ்செய்தவர்களையும் சேரக்கூடாது.

15. நம்நகரத்தார்க்கு ஏற்பட்டிருக்கும் எல்கையிலேயே குடியிருக்கிறது.

16. வேறு இடங்களில் குடும்பத்தோடு போய் குடியிருத்தல் கூடாது.

17. பெண்கள் சுவாமி தெரிசனம், தீர்த்தயாத்திரைகளுக்கு புருஷர்களோடு போய்வரவேண்டும் இதரகாரிய நிமித்தம் அன்னிய தேசங்களுக்கு பெண்கள் போகிறதில்லை.

18. எந்த விஷயத்திலும் முன் வழக்கப்படி நடந்துகொள்கிறது.

19. நகரக்கூட்டம் கோவில் வாசலிலாவது மடத்துவாசலிலாவது கூடிச் சாதிகியாயம் பேசுகிறது.

20. மேற்கண்ட ஒன்பது கோவில் நகரத்தாருக்கும் அவரவர்களுக்குள்ள கோவில் களிலிருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும் விபூதிபிரசாதமும் வந்துதான் கலியாணம் நடத்தல் வேண்டும்.

இரணியூர் கோவிலாரும் பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தாராதலால் தம்முள் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது மற்றய கோவில்களில் செய்துகொள்ளலாம்.

இந்தப்படி இந்தச்சரித்திரம் பூங்கொன்றை வேலங்குடி கல்வெட்டில் இருக்கிறது.

(பூங்கொன்றை வேலங்குடி என்பது சுண்டக்காடு வேலங்குடி.)

இவ்வித சட்டதிட்டங்களுடன் பிறர்களிடம் அடிமை வேலை பார்க்கிறதில்லையெனவும் ஈதல் தவிர இரப்பதில்லை யெனவும் தீர்மானித்து இவைகள் சிறப்பாய் நடந்துவரும்படியாக தியானிப்பதற்கு ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒவ்வொரு கோவில்களிருந்தும் இலட்சக்கணக்கான பணங்களைச் சிலவுசெய்து பாண்டியநாடு, சோழநாடு முதலியவைகளிலும் மலேயா, சிலோன், பர்மா முதலிய தேசங்களிலும் சிவாலயங்கள், குகப்பெருமானாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள் முதலியவைகளும் குருபூசைமடங்கள் அன்னசத்திரங்கள், தடாகங்கள், தண்ணீர்பந்தல், பசுமடம், நந்தவனம், வேதபாராயணசாலை தேவார பாராயணசாலை சிவாகம சித்தாந்தசாலை, பெண் பாடகசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை, ஹைஸ்கூல், காலேஜ் சர்வகலாசாலை ,சமயச் சங்கங்கள் வர்த்தக சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், சாரணச் சங்கங்கள் முதலிய எண்ணிலா தருமங்கள் இயற்றிவருகிறார்கள்.

இதோடல்லாமல் தங்கள் குலதெய்வமாக குன்னக்குடி, பழனி, முதலிய தலங்களில் சாமியாடிச் செட்டியாரவர்களைத் தலைமையாக வகித்து காவடி வேல் முதலியனகொண்டு அன்னதானம் முதலியன நடத்திவருகிறார்கள்.

தீட்சாகுரு ஆதிசைவர் ஆச்சாரிய அபிடேகஞ் செய்துகொண்டோர்கள் இவர்களை வணங்குதலும் விபூதிவாங்கித்தரித்துக் கொள்ளுதலும் தவிர ஏனையோர்களை வணங்குதல்உபதேசம்செய்துகொள்ளுதல் தகாதெனும் விரதம் பூண்டவர்கள்.

சைவசமையமே சமையம் என்பதை உணர்ந்து தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம்,

கந்தபுராணம், முதலிய சிவபுராணங்களிற் பற்றுதல் வைத்து சிவாலயங்களிற் கல்வி நிறைந்துள்ளார்களைக்கொண்டு பாராயணஞ்செய்யக்கேட்டு மனம் மகிழ்ந்து வருகிறார்கள்.

சைவசமைய வளர்ச்சியைக்கருதி சிவநேசர் திருக்கூட்டத்தார் தங்களின் சிரமத்தைக் கவனியாது ஒவ்வொருமாத பிரதோஷங்களிலும் விருதுகளுடன் ஒவ்வொரு நகரங்கள்சென்று அரிய உபந்நியாசங்கள் செய்து பேரின்பமுற்று வருகிறார்கள்.

கூழிபிறைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் நால்வர் குருபூசையும் பட்டணத்தடிகள்குரு பூசையும் நடத்தி பங்குனி மாதங்களில் ஜீவகாருண்யமாக கோலை மறுத்தல் பிரசாரமும் செய்துவருகிறார்கள்.

நம் சைவசமயத்தையே மேலெனக்கருதி நடக்கவேண்டுமென தமது திருமாளிகைகளில் எடுத்த காரியம் இடையூறின்றி முடியும் வண்ணம்.

### பிள்ளையார் நோன்பு.

இவ்விரதம் ஒவ்வெருவருடமும் கார்த்திகை மாதம் அமரபக்ஷ பிரதமை தொடங்கி மார்கழி மாதம் பூர்வபக்ஷம் சஷ்டிதிதியுடன் பூர்த்தியாகிற 21 நாள்விரதத்தை நாள்ஒன்றுக்குஒவ்வொருநாலாக 21 இளைகளை ஒன்றுசேர்த்து எடுத்து மஞ்சள் நீராட்டி விநாயகருக்கு அபிடேகாதி அலங்காரங்கள் செய்து ஆடை சாத்தி மாலை சூட்டி ஆவரைக் குச்சியில் நெல்நாற்றும் கன்னுப்பூ கொன்றைப்பூ ஆவரம்பூக்களும் கட்டி விநாயகரின் வலப்பக்கம் வைத்து அவல், பொரி, கடலை, எள்ளுருண்டை, மோதகம், தேங்காய்,பழம், பச்சரிசி மாவில் தேன் சர்க்கரை, நெய், ஏலம், சுக்குச் சேர்த்து உருண்டை ஆக்கி நெய் வார்த்து 21 இளை திரியாகப் போட்டு தீபமேற்றி நிவேதனம் செய்து அத்தீபத்துடன் மாவிளக்கு மாவை உண்டு நோன்பைப் பூர்த்திசெய்து கொள்வார்கள்.

### காப்புக்கட்டுப் புதுமை.

இப்புதுமை முதலிற் பிறக்கும் ஆண்குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் செய்யும் புதிய சடங்காதலின் இதற்குப் புதுமையென்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

இப்புதுமைக்கு நல்லநாட் பார்த்து குழந்தையின் தாய்மாமனார் வீட்டிலிருந்து பல சீர்கள் வரப்பெற்று குறித்தகாலத்து ஆடை ஆபரணங்களணிந்து அழகிய பாசிகளால் உயர்ந்தமுத்து ஆரங்களைப்

போல நல்லமாலைகளாக்கி உயிர்நிலையாக மார்பில் மாறுதலாகத் தொங்கக் கட்டி தூபதீபம்காட்டி திருநீற்றுக் காப்பணிந்து பட்டாடை கட்டி ஓர் மரவையின்மீது ஆசனமிட்டு குழந்தையை அதன் மீது உட்காரச்செய்து நிலை விளக்கு ஏற்றிவைத்து அக்குழந்தையின் தாயாரும் தாயாருடன் பிறந்த மாமனும் பிதாவுடன் பிறந்த அத்தையும் ஆகிய மூவரும் மரவையுடன் குழந்தையைத் தூக்கி மூன்றுதரம் வலம்சுற்றி வாழ்த்தி பெரியோர்களை நோக்கி இப்புத்திரனுக்கு இன்றுமுதற்றான் பாசமாகிய பாசியால் பந்தித்திருக்கிறது என்று சொல்லி கொடுக்க ஒவ்வொரு பெரியாரும் வாங்கி ஆசீர்வாதம் செய்த உடன் பழம் முதலியன வழங்குவார்கள்.

## கார்த்திகைப் புதுமை.

இப்புதுமை கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை அன்று தங்கள் வீட்டில் வாழைமரம் ஒன்று நாட்டி அதன்மேற் பெரிய அகலில் எண்ணை ஊற்றி பெரிதாக திரிபோட்டு வைத்து வாழைமரத்தின் நடுவில் சதுரமாக இரண்டு தட்டில் அநேகம் தீபமேற்றி வைப்பதற்கு வேண்டிய மார்க்கம்செய்து மரத்தைச் சுற்றிக் கோலமிட்டு அலங்கரித்து தீபமேற்றும்போது அம்மரத்தில் வைத்திருக்கும் தீபங்களை ஏற்றிவைத்து அச்சடங்குக் குறிய மணமகனுக்கு மாப்பிள்ளைக் கோலமாக அலங்கரித்து மேழம் முதலாம் வாத்தியங்கள் முழங்க மங்களகரமான குதிரைமீதேற்றி தேங்காய் முதலியவைகளோடு சங்கத்தொனி செய்ய ஆலயம் சென்று தெரிசனம் செய்த சூழ்ந்து கொழுத்திக்கொடுத்துப் பிடிக்கச்செய்து சொக்கப்பானைக் கொழுத்திப் பூரணமாய் எரியும்போது மணக்கோலமுடையானை,

“பங்கயன் முகுந்தன் நாம பாபென்றுன்னியே
தங்களி லிருவரும் சமர்செய் துற்றுழி
அங்கவர் வெருவா அங்கியா யெழு
புங்கவன், வடிவமென்று — சுட்டிக்காட்டி தெரிசிக்கச் செய்து ஆலயத்தினுட் சென்று சுவாமி தெரிசனஞ்செய்து முன் போல் மங்களவாத்தியங்கள் முழங்க புரவிமீதேறி ஊர் ஆலத்தியெடுக்கப் பெற்று ஊர்வலம்வந்து மாளிகை சேர்ந்து பெண்களாக சடங்கு ஒன்று முடித்து பூர்த்திசெய்வார்கள்.

## திருவாதிரைப் புதுமை.

இப்புதுமை நடத்துவது மார்கழி மாதம் வரும் திருவாதிரை நாளேயாகும்.

இப்புதுமைக்குறிய மணமகளுக்கு நன்ருக அலங்கரித்து அப்பெண்ணின் தாய்மாமாவால் அன்று காலையில் 7 அல்லது 9 தடாகங்களிலிருந்து சிறிதாக ஈரமண்ணும் 7 அல்லது 9 செடிகளிலிருந்து பலநிறப்பூக்களும் எடுத்துவைத்தபின்னர் அம்மணச்சிறுமி அநேகம்பேர்களுடன் தங்கள் வகுப்பைச்சேர்ந்த 7 அல்லது 9 வீடுகளுக்குசென்றுகாய்கரிகளைவாங்கிக்கொண்டுவந்துபொங்கலிட்டுசில பதார்த்தங்கள் மணச்சிறுமியாற் சமைக்கப் பெற்று திருவாதிரை அடையொன்றில் நாற்றெட்டு கண்கள் உண்டாக கொண்டெழுத்தாணி கொண்டு மணப்பெண்ணின் கரத்தாற் றுவாரமிடச்செய்து பின்னர் ஆண் பெண் பலரும் சூழ ஆலயஞ்சென்று அருச்சித்து தன் தாயாராலேனும் தாய்மாமாவாலேனும் காலையில் வைத்திருந்த பூக்களையும் மண்களையும் எடுத்து புதுமைப் பெண்ணின் சிறத்தை மும்முறை சுற்றி காலிற்போட்டு பூரத்துடன் வழிபாடு செய்து சடங்கு பூர்த்தி செய்வார்கள்.

## சுவீகாரப் புதுமை.

இப்புதுமை புத்திரனில்லாதவர்கள் தங்கள் குடும்பவிருத்தியைக்கருதி தங்கள் குலம் கோவில்களுக்கு எற்ப தமக்கிசைந்த குடும்பத்தில் தாய், தந்தையர், தாய்மாமன் சம்மதியின்பேரில் சுவீகாரம் செய்துகொள்வது இம்மரபாரின் தொன்றுதொட்ட வழக்கம் திரவியம் கொடுத்தாவது அல்லது ஆபாணங்களணிந்தாவது அபிமானமாகவாவது மேற்கண்டபடி சுவீகாரம் செய்துகொள்வது வழக்கம்.

இவ்விதம் சுவீகாரம் செய்துகொண்ட புதல்வனுக்கே அவர்களின் சொத்து உறிமையாவும் உறியதாகும்.

புத்திரனைப் பெற்றவர்களும் சுவீகாரம் செய்துகொள்ளும் பிதாமாதாக்களும் இருதிறத்து தாய்மாமனும் கையெழுத்துச் செய்து முறியெழுதிக்கொள்கிற தினமே சுவீகார புதுமையாகிய விசேட தினமாகும்.

கல்யாணத்தில்

## இசைகுடிமானம் எழுதுகிற விதம்.

ஷ ஸ்ரீ உ கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் அருணசலஞ் செட்டி ராமநாதரோ, கோளசிங்க வளநாடாகிய பிரம்பூர்

KOVILOOR MADAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE)-4368461
9168
X 59925

நாட்டில்மாற்றூரானவீரபாண்டியபுரத்தில் அருப்பாக்கூருடையான் கண்ணப்ப செட்டி நாராயணரோ இவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறுகல்லெடை பொன் பதின்முக்ழஞ்சு, இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை, பொன் ஆறுகழஞ்சு வெள்ளி ஆறுகழஞ்சு, வெண்கலந் தாராப்பலம் ஆறுபத்தொன்று, வெள்ளாட்டிக்குப் பணம் முப்பது சீராட்டுச்சக்கரம் ஆறுபத்தொன்று, இவ்வகைப்படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஒன்பது, மோதிரம் விராகனெடை மூன்று, இவர் உகந்துடைமையாக் கொடுக்கும் பொன்வளையி எழுகழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்தநாள் இவரிடும் பொன் இவர் சொற்படி தெரிசனை பதின்முக் கழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம் இந்த இசைகுடிமானம் எழுதினேன் கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியில் குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான்.

க்கையெழுத்து.

ஆதீனம்
...லூர்-630 307

இத்தனப்பெருந் தகையார் விபூதி உருத்திராக்கமணிந்து திருவாசக பூசை புராண பாராயணம் விநாயகர் தெரிசனம் சிவாலய தெரிசனம் முதலியன செய்தே எக்காரியங்களும் இயற்றுவ தென விரதம் கொண்டு வாழ்ந்துவருகிறார்கள்.

இனி பல தருமங்களையும் செய்துவரும் இப்பெரியார்கள்வசித்து வரும் நகரத்தின் பெயர் தருமஞ்செய்த இடம் காலம் அத்தரும நிலையத்தின் உருவப்படம் தருமஞ்செய்த குடும்பத்தாரில் இப்போதிருக்கும் தலைவரின் உருவப்படம் முதலியவைகளைச் சேர்த்தும் நாட்டுகோட்டை நகரத்தார் தருமபரிபாலன விளக்கம் என்னும் நூல் பிரசுரம் செய்யக் கருதியுள்ளோம் அஃதை நகரத்தார்கள் பலரும் அறியும் வண்ணமாக இம் மங்களம் நிறைந்த நாளில் வெளியாக்கக் கருதினோம்.

இப்புத்தகத்தை வாங்கிப் படிப்போரனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் இஷ்ட சித்திகளைக்கொடுத்து வாழும்படி செய்ய வேண்டுமாய் அன்னான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!